1979 மார்ச் 6] [பேரவைத் தலைவர்]

கள் ஆயிற்று என்றால் எழுப்பலாம். இப்பொழுது கொடுத்து விட்டு இப்பொழுதே எழுந்து என்னவாயிற்று என்று கேட்டால் என்ன செய்வது ?

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, என்னுடைய தொகுதி சம்பந்தமாக 3-3-79 இல் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது இன்னும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 3-3-1979 ஆம் நாள் கொடுத்தீர்கள். 4 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை. நேற்றைக்கு ஒரு நாள் ஆகியிருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால் அமைச்சர் சார்பிலே பதில் வந்தாக வேண்டும். பதில் வந்த பிறகுதான் அதை நான் இங்கே கொண்டு வர முடியும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவரவர்களே, போன மாதம் 26 ஆம் தேதி 'கோ 441' அதாவது இராஜராஜன் என்ற அரிசியைச் சாப்பிட்டவர்களுக்கு இரத்த பேதி வந்து தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற நிலைமையைப் பற்றிக் கொடுத்திருந்தேன். இரத்த பேதி என்றால் கவலை வேண்டாமா? அது என்னவாயிற்று என்று தலைவரவர்கள் சொல்ல வேண்டும். இல்லையென்றால் எப்பொழுது எடுக்கப்போகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பரிசீலிக்கப்படும்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) நக்ஸலைட் என்பதாக மார்க்சிஸ்ட் பலர் கைது செய்யப் பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம். "நெல்லை மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ராஜாங்கம், செங்கற்பட்டு ராதாகிருஷ்ணன், மதுரையில் மூவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சென்னை கோபு மற்றும் பலரை போலீசார் நக்ஸலைட் எனக்கூறி கைது செய்திருப்பதால் மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலையைக் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு, திரு. ஆர். உமாநாத், திரு. கே. ரமணி, திரு. பி. சொர்ணம், திரு. ஆர். கிருஷ்ணன், திரு. சி. கோவிந்தராசன், திரு. என். பழனிவேல், திரு. வி. கே. கோதண்டராமன், திரு. எஸ். அழகர்சாமி, திரு. உத்திராபதி, திரு. அம்பிகாபதி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. உமாநாத் அவர்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, நானும் கொடுத்திருக்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் கையெழுத்துப் போடாமல் கொடுத்துவிட்டீர்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: சரியாகப் பார்க்கச் சொல்லுங்கள், கையெழுத்து இருக்கிறதா இல்லையா என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கூத்தகுடி சண்முகம், திரு. சிவசாமி ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். திரு. சொர்ணம் அவர்கள்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினமும், அதற்கு முந்தைய தினமும் தமிழ்நாடு பூராவும் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட, எங்களது கட்சியைச் சேர்ந்தவர்கள் அதாவது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், குறிப்பாக அதிலே அதிகப்படியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இவர்களையெல்லாம் நக்ஸலைட் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்திருக்கிறோம் என்று கூட அரசுத் தரப்பிலே, போலீஸ் கமிஷனர் ஒரு அறிக்கை கொடுத்திருப்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் தரப்பிலேயிருந்து கைது செய்யப்பட்ட பலர், எங்கள் கட்சியினுடைய மாவட்டக் குழு உறுப்பினர்களாகவும் மாவட்டச் செயற் குழு உறுப்பினர்களாகவும் சில இடங்களிலே தாலூகா கமிட்டி செயற்குழு உறுப்பினர்களாகவும் விவசாய செயற் கமிட்டி உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களை, நக்சலைட்டுகள் என்று ஏதாவது காரணம் சொல்லி கைது செய்கின்ற போக்கில் இப்பொழுது போலீஸ் தரப்பிலே மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

1979 மார்ச் 6] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்]

உதாரணத்திற்குச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று சொன்னால், பக்கத்திலேயே இருக்கிற செங்கற்பட்டில் எங்கள் கட்சியினுடைய-மார்க்சிஸ்ட் கட்சியினுடைய—மாவட்டக் குழு உறுப்பினர், அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாய சங்கத் தாலுக்கா செயலாளர், ஒரு முழு நேர ஊழியராக வேலை செய்கின்ற ராதா கிருஷ்ணன் என்ற ஊழியரை அவர் நக்சலைட் என்று காரணம் சொல்லி கைது செய்திருக்கிறார்கள். அதே போல் நெல்லை மாவட்ட பீடிச் சங்கச் செயலாளர்—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாவட்டக் கமிட்டி உறுப்பினர் ராஜாங்கத்தைக் கைது செய்திருக்கிறார்கள். மதுரையிலே கைது செய்திருக்கிறார்கள். திருச்சியிலே கைது செய்திருக்கிறார்கள், இப்படிப்பட்ட நிலை— இன்னும் சொல்லப்போனால், மார்க்சிஸ்டுகளைக் கைது செய்கிறோம் என்று சொன்னால் ஏன் கைது செய்கிறார்கள் என்ற பிரச்னைவரும் என்பதால் நக்ஸலைட்டுகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற பெயரால் கைது செய்வதைப்பற்றிய நிலை பற்றி இந்த அவையிலே விவாதிக்க வேண்டுமென்றும், அப்படிக் கைது செய்வது மக்களிடையே பதட்ட நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் செயலின் உச்சபட்சமாக, சென்னையிலே உள்ள 'மக்கள் செய்தி' என்ற தினசரிப் பத்திரிகை அலுவலகம் சோதனை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இது மக்கள் மத்தியிலே பதட்ட நிலையை ஏற்படுத்தியிருப்பதன் காரணமாக, இது முக்கியமான பிரச்னையாக இருப்பதன் காரணமாக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கவேண்டுமென்று பேரவைத் தலைவரவர்களே, உங்களைக் கேட்டு அமர்கிறேன்,

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நக்சலைட் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று இத்தச் சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்தி வருகிற நேரத்தில் நக்சலைட் என்ற பெயரில் எல்லாக் கம்யூனிஸ்டுகளையும் கைது செய்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. உங்களுக்கெல்லாம் தெரியும். எங்கோ இரண்டு கொலைகள் நடக்கின்றன. அந்தக் கொலைகளுக்கு யார் காரணம் என்பதை நீங்கள் விசாரித்துத் தண்டிப்பதிலே ஆட்சேபணை கிடையாது. கொலை செய்த இடத்திலே சிலபேர் துண்டுப் பிரசுரங்களைப் போட்டு அதன் மூலம் நக்ஸலைட் என்ற நிலையை ஏற்படுத்தி, எல்லோரையும் கைது செய்யும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது எங்கள் குற்றச்சாட்டு. இதற்கு மேல் இன்னும் ஒரு படி மேலே போய், கம்யூனிஸ்டுகளுக்குச் சாதகமாகச் செய்தி போடுவதால் 'மக்கள் செய்தி' பத்திரிகை அலுவலகத்தில் தாக்குதல தொடுத்து, அதன் ஆசிரியரையும் விசாரித்திருக்கிறார்கள்.

[திரு. கூததகுடி ச. சண்முகம்] [1979 மார்ச்சு 6

யாரும் இல்லாமலிருக்கும்போது ஒரு மணிக்கு அப்பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று, கம்யூனிஸ்டுகளுக்குச் சாதகமாக செய்தி போடக்கூடாது என்பதற்காகத் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி நக்சலைட்டுகள் என்ற பெயரில் வேண்டுமென்றே கம்யூனிட்டுகளை அடக்க நினைப்பது தான். கொலையுண்டவர்கள் ஒன்றும் கம்யூனிஸடுகளுக்குப் பயங்கரமான விரோதிகள் அல்ல. அப்படிப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கம்யூனிஸ்டுகளைக் கைது செய்வதால் தமிழ்நாடெங்கிலும் பதட்ட நிலை ஏற்படக் காரணம் இருக்கிறது. ஆகவே, இது குறித்து, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-10]

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொரணம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்களும் இங்கே, நக்ஸலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்ட பிரச்னையைக் குறித்து இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லுகிறபோது நக்ஸலைட்டுகள் என்று குற்றம் சாட்டி மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களைக் கைது செய்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொரணம் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் கம்யூனிஸ்டு இயக்கத்தைத் தடுக்கவும், குறிப்பாக 'மக்கள் செய்தி' பத்திரிகை, அது கம்யூனிஸ்டு பத்திரிகை என்பதால், அதைப் பயமுறுத்தவும், இந்தக் காரியம் வேண்டுமென்றே திட்டமிட்டு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். நான் மக்களுக்காக இங்கே குறிப்பிட விரும்புவது, கம்யூனிஸ்டு இயக்கத்தைச் சேர்ந்தவர்களைத் துன்புறுத்தவோ, வேண்டுமென்றே கைது செய்ய வேண்டும் என்றோ, காவலில் வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனோ இந்த அரசு நிச்சயமாகக் கருதவில்லை. இன்னும் ஒரு படி மேலே சென்றுகூட நான் சொல்லலாம். நக்ஸலைட்டுகள் நடத்துகிற இயக்கத்தைக் கூட சமூக, பொருளாதார விஷயங்களில் நீதி வேண்டும் என்கிற அடிப்படைக் கொள்கையை இந்த அரசு வரவேற்கிறது. நக்ஸலைட்டுகள் இயக்கத்தைச் சட்ட விரோத இயக்கமாகக் கருதி வேண்டுமென்றே அந்த இயக்கத்தைத் தடை செய்ய வேண்டுமென்றோ, இயக்கத்தைச் சேர்ந்தவர்களைக் கைது செய்ய வேண்டுமென்றோ இந்த அரசு நடந்ததும் இல்லை, விரும்பியதும் இல்லை. இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தொந்திரவு செய்யவேண்டும் என்ற நோக்கமோ நிச்சயமாக இந்த அரசுக்கு இல்லை என்பதை இந்த மன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1979 மார்ச் 6] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஆனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலை உண்மையில் என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். நான் கூட வேடிக்கையாகக் குறிப்பிட்டேன், "இந்தமாதிரி கொலை நடந்தாலும் ஒத்தி வைப்புத் தீர்மானம், கொலைமீது நடவடிக்கைகள் எடுத்து விசாரணை நடந்தாலும் ஒத்தி வைப்புத் தீர்மானம்" என்று குறிப்பிட்டேன். இரண்டு இடத்தில் இரண்டு கொலைகள் ஒரே மாதிரி நடைபெற்றுள்ளன. திருவாவடுதுறை கிராம அதிகாரி திரு. முத்துக் குமாரசாமி அவர்கள் கொலை செய்யப்பட்டதை இந்த மன்றம் நன்கு அறியும். இந்த நிகழ்ச்சி 26—2—1979 அன்று நடைபெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜமாணிக்கம் அவர்கள் கொண்டு வந்த விஷயம். அவர்கள் முன் மொழிந்து பேசியபோது "அவர்கள் என்னையும் தேடி வருவதாகக் கேள்விப்பட்டேன்—எங்களுக்குப் பாதுகாப்பு தேவை அவர்கள் என்னையும் கொலை செய்யப் போகிறார்கள் என்று அஞ்சுகிறேன். அந்த அளவுக்கு இது பொது முக்கியத்துவம் வாய்ந்தது" என்பதை எடுத்துச் சொன்னதை இந்த மாமன்றம் நன்கு அறியும்.

செய்துரைச் சேர்ந்த தட்சிணாமூர்த்தி என்பவர் 3—3—79 அன்று கொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்த இரண்டு கொலைகள் மாத்திரம் அல்ல. அந்தக் கொலை செய்யப்பட்ட இடங்களிலே சில துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டு இருக்கின்றன. அந்தத் துண்டுப் பிரசுரத்திலே, 'ரத்தப் புரட்சி ஓங்குக'; 'ஆயுதப்புரட்சி' ஓங்குக, "சாருமஜூம்தார் அவர்கள் வழி நடப்போம்' என்ற வகையில் எல்லாம் கோஷங்கள் இருக்கின்றன.

திரு. சண்முகம் அவர்கள் பேசுகிறபோது இது வேண்டுமென்றே நக்ஸலைட் இயக்கத்தைப் பழி தீர்க்க வேண்டும், அந்த இயக்கத்தைத் தடைப்படுத்த வேண்டும் என்ற முறையிலே கூட அவைகள் போடப்பட்டு இருக்கலாம் என்று தெரிவித்தார்கள். ஆனால் இந்த இரண்டு கொலைகள் சம்பந்தமாகச் சில விவரங்கள் எங்களுக்குத் தெரிய வந்தது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்பட்டவர்கள் சில பேரைக் காவலில் வைத்து விசாரணை நடத்தியதன் மூலம் இன்னும் சில தீவிரத் திட்டங்கள் இருக்கின்றன என்று சர்க்காருக்குத் தெரிய வந்தது. எந்த அடிப்படையில் இந்தக் கொலைகள் நடைபெற்றன என்று பார்க்கிறபோது 'வர்க்க விரோதிகளைத் தீர்த்து கட்டுவது' என்ற அடிப்படையின் பின்னணியிலே இருக்கக்கூடிய சூழ்நிலை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. நடைபெற்ற இரண்டு கொலைகள் மட்டும் அல்ல, மேலும் கொலைகள் நடந்துவிடக் கூடாது என்று இந்த அரசு விரும்புவதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். என்ன உண்மையில் நடந்தது என்பதை அரசு விசாரித்து அறியவேண்டும்

என்றும், தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்ற முறையிலேதான் சில இடங்களிலே உள்ளவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் என்றும், அரசாங்கம் வேண்டுமென்றே நக்ஸலைட்டு இயக்கத்தைச் சேர்ந்தவர்களை, கம்யூனிஸ்ட்டு கட்சியைச் சேர்ந்தவர்களைக் கைது செய்திருக்கிறார்கள் என்று சொல்வதில் உண்மை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு அரசாங்கத்தின் அடிப்படையான கடமை மக்கள் உயிருக்குப் பாதுகாப்பு அளிப்பது என்பதை இந்த மன்றத்தில் பல நேரங்களில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களோ, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களோ நக்ஸலைட்டுகள் என்று கருதப்பட்டு அவர்களைக் கைது செய்து இருக்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். நான் அதற்கு மட்டும் ஒன்றைச் சொல்ல விரும்புவது, அப்படி எங்கேனும் தவறாக நடந்து இருந்தால் அதைப் பற்றி நிச்சயம் அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கும். ஆனால் அதே நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார் கள், அதை நான் நினைவு கூற விரும்புகிறேன்.

செஞ்சிக் கோட்டைக்குப் போனவன் எல்லாம் ராஜாதேசிங்கு அல்ல, கதர்ச் சட்டை போட்டவன் எல்லாம் காங்கிரஸ்காரன் அல்ல என்று. அதைப் போல நம்முடைய கட்சியில் இருக்கி றார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் நம்முடைய கட்சிக் காரர்கள்தான் என்று நாம் கருதிவிடக் கூடாது. சில நேரங் களில் அவர்களே கூட மார்க்சிச கம்யூனிஸ்ட் இயக்கத்தை, இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கலாம். அதன் தலைவர்கள் திறமையானவர்கள், தகுதி படைத்தவர்கள் என்ற காரணத்தாலே நிச்சயமாக அந்தப் போக்கை அனுமதிக்க மாட்டார்கள் என்று அரசு நம்புகிறது. ஆகவே, தவறான அடிப்படையில் கைதான வேறு சம்பவங்கள் இருக்குமானால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

'மக்கள் செய்தி' பத்திரிக்கை பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தப் பத்திரிகை வரக்கூடாது என்றோ, அல்லது அரசுக்கு மாறாகச் செய்திகள் வருகின்றன என்றோ அரசு கருதவில்லை. இன்னும் சொல்லப்போனால், சாதகமான செய்திகள் கூட 'மக்கள் செய்தி'யில் வருகின்றன. ஆகவே, 'மக்கள் செய்தி' பத்திரிகைமீது அரசுக்கு வருத்தமோ பகையோ கிடையாது. ஆனால் நக்ஸலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே இருக் கிறார்கள் என்ற தடையம் கிடைத்தது. அந்த அடிப்படையில் விசாரித்துப் பார்க்க அதிகாரிகள் சென்றார்கள்; அங்கே யாரும் இல்லை என்று செய்தி வந்து இருக்கிறது. மக்கள் செய்தி

1979 மார்ச் 6] [திரு. ச. இராமச்சந்திரன்]

வெளியிடுவதற்கு இடையூறாக இருக்க வேண்டும் என்று கருத வில்லை. சில தகவல்களின் பேரில் நடவடிக்கை எடுக்கப் பட்டதே தவிர வேறு அல்ல. அந்த நடவடிக்கை எந்த இயக் கத்தையும் கட்டுப்படுத்துவதற்காக அல்ல. மக்களின் உயிருக்குப் பாதுகாப்பு தரவேண்டும் என்ற முன்னெச்சரிக்கையாக நடத்தப் பட்ட நடவடிக்கைதான் இது. நிச்சயமாக அரசாங்கம் அவர்களை அதிக நாள் வைத்திருக்கப் போவதில்லை. அரசு நிச்சயமாகக் காலம் கருதி தக்க நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, இந்த அவையின் இதர அலுவல்களைத் தள்ளி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ஒத்தி வைப்புத் தீர்மானம் மீது அமைச்சர் பதில் அளிக்கும்போது கொல்லப் பட்டு செத்தவர் நக்சலைட்டுகளால் கொல்லப்பட்டு இருக் கலாம் என்று சந்தேகப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்களே போட்ட அந்த துண்டு அறிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அதற்கு மாறாக, ஏ.டி.எம்.கே., காங்கிரஸ், சி.பி.ஐ., பற்றி . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர் மானத்தின் போது நேற்று சொன்னதை வைத்து இப்போது எழுப்புவது ஒழுங்குப் பிரச்சினை அல்ல.

(ஆ) விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் ஓர் வழக் கறிஞர் நடத்தப் பெற்ற முறை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1-3-79 அன்று சென்னை யைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. ரத்னாகரன் என்பவர் விருகம் பாக்கம் போலீஸ் நிலையத்திற்கு வழக்கு சம்பந்தமாகச் சென்ற போது, அவரைப் போலீசார் இழித்தும் பழித்தும் பேசி அவர் மீதே ஒரு வழக்கு பதிவு செய்துள்ளதால் சென்னையில் உள்ள வழக்கு மன்றங்கள் நடக்க இயலாமல் இருப்பதோடு, வழக் கறிஞர்கள் வழக்கு மன்றம் செல்லாது புறக்கணிப்பதால் நாட்டில் நீதித் துறையில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க